www.maveerarnaal.ch

# தமிழர் நினைவேந்தல் அகவம் - சுவிஸ்
## Tamilar Remembrance Foundation - Swiss
Postfach 439, 4528 Zuchwil

trfswiss@gmail.com

**11 வயதுப்பிரிவு**
(01.01.2007 – 31.12.2007 வரையில் பிறந்தோர்)

## முப்படை தந்த முதற்பெருந்தலைவர்

ஒப்பாரும் மிக்காரும் இல்லாத பெரும் ஆற்றலுடன் இப் பாரினில் எமக்கெனப் பிறந்தவர் எங்கள் தலைவர் மாமா. தமிழினத்தின் வீரவரலாற்றை விழிநிமிர்த்திப் பார்க்க வைத்த வீரத்திறலோன். 'தமிழே உயிர்' எனக் கொண்டு, கலை, பண்பாட்டை வளர்த்து, தமிழ்ச் சந்ததியின் அறிவுத்திறத்தைக் கூர்செய்து தமிழரின் மரபுவழித் தாயகமாம் தமிழீழத்தை மீட்டெடுக்க உரிமைப்போர் தொடுத்தவர்.

கல்தோன்றி மண் தோன்றாக் காலத்தின் முன் தோன்றிய மூத்த குடியாம் தமிழ்க்குடியை அடிமைப்படுத்தி ஆள நினைத்தோர்க்கு 'இது வீரத் தமிழர் பரம்பரை' என இடித்துரைத்த பெருந்தகை. அன்பும், அறமும், பண்பும், படைத்திறனும் ஒன்றாய் மிளிர எம்மினத்தின் தாயாகி நிற்பவர். தமிழீழத்தாய் ஈன்றெடுத்த சேயாகி ஒளிரும் போராளி. எல்லாளன் வழிவந்த வல்லாளன் எங்கள் தலைவர் மாமா.

மீறாத ஒழுக்கமும், மாறாத நெஞ்சுரமும் மிக்க, உன்னதமான, விடுதலைப்படையை உருவாக்கி, தமிழீழ விடுதலைக்காய் அல்லும்பகலும் அயராது உழைக்கின்ற கரிகாலச் சக்கரம். சதிகள் பலவற்றைத் தன் மதிநுட்பத்தால் உடைத்தெறிந்த விற்பன்னர். வெற்றியில் துள்ளாமலும் தோல்வியில் துவளாமலும் விடுதலைப் பயணத்தைச் சரியான பாதையிலே வழிநடத்திச் சென்ற பிதாமகன்.

உலகப் படைகள் வியந்து பார்க்க தரை, கடல், வான் மூன்றிலும் படைநடத்தி, வெல்லும் வழிகாட்டி, முப்படை தந்த முதற்பெருந்தலைவர் எங்கள் தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு. வேலுப்பிள்ளை பிரபாகரன் அவர்களே. ஓர் உயரிய இலட்சிய உறுதியும் தொலைநோக்குப் பார்வையும் தன் இனத்தின் மீது அளவிட முடியாத பற்றும் நிறைந்த விடுதலைப் போராளி அவரென்றால் மிகையில்லை.

"அஞ்சாமை, ஈகை, அறிவு, ஊக்கம் இந்நான்கும்
எஞ்சாமை வேந்தர்க்கு இயல்பு"

எனச்சொன்ன வள்ளுவரின் கூற்றுக்கிணங்க வாழ்கின்ற தலைவர் மாமா அவர்களே தமிழ்க்குலத்தின் அச்சாணி. எமக்கெல்லாம் வழிகாட்டி. தமிழீழ சுதந்திர அரசின் நெறிமிக்க செயற்பாடுகளின் மூலம் எமக்கு விடுதலை வேட்கையை உணர்த்திய பேராசான் அவரே.

எங்கள் தலைவர் மாமா வளர்த்தெடுத்த விடுதலைப் போராட்டம் தன் இலக்கை எட்டியே தீரும். எங்கள் மாவீரர்களின் கனவு நனவாகும் காலம் வெகுதூரம் இல்லை. தமிழீழ விடுதலைப் புரட்சியின் நாயகனாகவும் வையகத் தமிழர்களின் எழுச்சியின் வடிவமாகவும் திகழும் தலைவர் மாமாவின் வழிகாட்டல் எம்மையெல்லாம் வழிநடத்த, உறுதி கொண்டு வெல்வோம் தமிழீழம்.

நன்றி,

வணக்கம்.